துறை அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றால், அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

புதிய சொற்கள்

***45327—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழியில் புதிய சொற்கள் உருவாக்கும் பணி தொடர்கிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை உருவாக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் எத்தனை என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சொற் புதிது, சுவை புதிது, பொருள் புதிது என்பான் பாரதி. அந்த வழிநடந்து, தமிழால் வளர்ந்து வருபவர்கள் பலபேர் இருந்தாலும், தமிழை வளர்த்தெடுத்த புரட்சித் தலைவர் அவர்களுடைய வழிநின்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிநின்று ஆட்சி செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தமிழில் புது சொற்களை உருவாக்குவதற்காக சொற்குவை திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளார்கள். அந்தச் செயல்பாட்டில் 7

2019 ஜூலை 2]

Dictionary Projects–ஐ ஒருங்கிணைத்து தமிழில் 4,01,931 வார்த்தைகள் இருக்கின்றன என்பதை நாங்கள் முதலில் கண்டறிந்திருக்கிறோம். ஆங்கில அகராதி—Oxford Dictionary–ல்கூட ஆங்கிலத்தில் 1,71,476 வார்த்தைகள் மட்டும்தான் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலத்தைப் போல் தமிழில் இரு மடங்குக்குமேல் தனித்துவம் பெற்ற வார்த்தைகள் உள்ளன என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அதைப்போல, படைப்பாளிகளாக நமது இளைஞர்களை உருவாக்கும் திட்டம்தான் இந்தச் சொற்குவைத் திட்டம். புது சொற்களை உருவாக்கும் தளம்-platform; Online Dictionary தமிழில் இருக்கிற அனைத்துச் சொற்களையும் இணையதளத்தில் access செய்யக்கூடிய வாய்ப்பு; பெருமளவில் பயன்படும் சொற்களுக்கு அடையாளமிடுதல்-tagging; தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல்; ஒத்த பொருளுடைய சொற்களைத் தொகுத்தல்; கவிதை உருவாக்க கவிதைப் படைப்பாளிகளாக உருவாக நமக்கு உதவுதல்; எதுகை, மோனை, சந்த ஒற்றுமையைக் கண்டறிதல். 620 துறைகளில், நிபுணர்கள், தமிழ் ஆர்வலர்களை சொற்படைப்பாளிகளாக ஒருங்கிணைத்தல் மற்றும் கட்டணமில்லா அழைப்பு மையம்; போன் செய்தால் அனைத்து தமிழ் வார்த்தைகளுக்கும் என்ன பொருள் என்பதை அறிந்து கொள்ளும் வசதி; தமிழில் பிறமொழி கலப்பினைத் தவிர்த்திட துணை நிற்றல்; இதுவெல்லாம் அடங்கிய தமிழ்ப் பெருங்கடலின் நீளத்தை, ஆழத்தை, அகலத்தை அளவிடும் மிகப் பெரிய முயற்சி இது. British National Corpus என்று சொல்லக்கூடிய பிரிட்டன் தேசிய தரவகத்தின் வடிவில் அமைக்கப்பட்டிருக்கிற இந்தச் சொற்குவை திட்டத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு விடை கிடைக்கும். இன்னும் இரண்டு நாட்களில் மக்கள் பயன்பாட்டிற்காக அது கொண்டுவரப்படவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலிலிருந்து கலைச் சொற்கள் மட்டும்தான் அந்தக் கண்டுபிடிப்பிலே இடம் பெற்றிருப்பதாக நான் அறிகிறேன். இது கணினி காலம், அறிவியல் உலகம். எனவே, அறிவியல் சார்ந்த சொற்களை உருவாக்குவதற்கு,

கண்டுபிடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, CD என்கிற ஆங்கில வார்த்தைக்கு குறுந்தகடு என்று தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது. கணினியிலே பயன்படுத்தப்படுகிற Pen Drive–க்கு தமிழ் சொல் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. எனவே, அறிவியல் சார்ந்த சொற்களை தமிழில் மொழிபெயர்க்க துறையின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, அறிவியல் சார்ந்த சொற்களை அதிக அளவில் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு முயற்சி எடுப்பது அறிவியல் சார்ந்த உலகத்தில் வாழ்கின்ற நமக்கு நல்லது என்று நான் கருதுகிறேன். அந்த முயற்சியிலே இந்தத் துறையை ஈடுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைச் சொல் என்கிற வார்த்தைக்கு arts என்பது மட்டுமே பொருள் கிடையாது. அதில் science–ம் இருக்கிறது, technology–ம் இருக்கிறது. ஆகவே, கலைச் சொல் என்கிற வார்த்தையையே மாற்றியமைக்க வேண்டுமென்று நினைக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய தமிழ் கலைக் கழகம் 2016–லிருந்து இயங்கத் துவங்கியிருக்கிறது. இதில் 100–க்கு மேற்பட்ட நிபுணர்கள் கலந்துரையாடி, மாதத்திற்கு இரண்டு முறை அவர்கள் சந்தித்து, கலைச் சொற்களோடு technical terms–ஐயும் சேர்த்து 22,637 சொற்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதுபோக, மொழியியல் சார்ந்த வேதியியல் அகராதியை நாம் வெளியிட்டிருக்கிறோம். மருத்துவ அகராதியை வெளியிட்டிருக்கிறோம். மொத்த சொற்களுடைய எண்ணிக்கை 8,03,875 ஆகும். பொது வார்த்தைகளை அகற்றுவதற்கு software ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதுதான் இந்தச் சொற்குவை திட்டத்தில் வருகிறது. பொது வார்த்தைகளை அகற்றி வருகின்ற சொற்கள் 4,01,931 ஆகும். இன்னும் குறைந்தது 6,00,000 சொற்கள் தமிழில் இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

முற்பகல் 11–30

ஆனால், இதனை ஓர் இயக்கமாக இளைஞர்கள் மத்தியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு சொல் உண்டியல் என்ற ஒரு

திட்டத்தைக் கொண்டுவந்து, 10 கல்லூரிகளில் இதுவரை meeting போட்டு அவர்களிடத்தில் அகராதியியல் பற்றிய ஒரு புரிதலைக் கொண்டுவந்திருக்கிறோம். சொற்களைப் படைப்பவர்களாக அந்த இளைஞர்களை உருவாக்குவதுதான் இதன் முக்கிய அம்சம். பல நாடுகளில் இதனைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒருவகையில், வீரமாமுனிவர் அவர்கள் 1732 ஆம் ஆண்டில் அதற்கு முன்பு இருந்த நிகண்டுகளை எல்லாம் ஒன்று சேர்த்து அகர வரிசையில் கொண்டுவந்தார். அந்த முயற்சி, தமிழில் ஓர் அகராதியை உருவாக்கக்கூடிய முதல் முயற்சி. தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட அகராதிகள் இருக்கின்றன. இதனை ஒருங்கிணைத்து செய்யக்கூடிய வேலையின் ஓர் அம்சம்தான் இந்த சொற்குவைத் திட்டம். ஆனால், நீங்கள் சொன்னதுபோல் science, technology மட்டுமல்லாமல், 620 துறைகளாக இன்றைக்கு இந்தத் துறைகள் அனைத்தையும் பிரித்துள்ளோம். அந்தத் துறைகளில் ஒரு துறைக்கு நூறு பேர் வீதம் நிபுணர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் இளைஞர்களை internet—ல் register செய்யக்கூடிய பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இன்னும் இரண்டு நாட்களில் சிக்காகோ உலகத் தமிழ் மாநாட்டில் இந்த சொற்குவையினை நாம் launch செய்யப் போகிறோம். அந்தவகையில் மிகப் பெரிய அளவில் உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கக்கூடிய மிகப் பெரிய உறவுப் பாலமாக இது உருவெடுக்கும் என்று நான் நம்புகிறேன். கண்டிப்பாக தமிழ்க்கடலின் ஆழத்தை, அகலத்தை, நீளத்தை அளவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்த முயற்சி, தமிழக வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்டிப்பாக science, technology மட்டும் இல்லாமல் எல்லாத் துறைகளிலும் இருக்கக்கூடிய புதிய தத்துவங்களுக்கு தமிழ் வார்த்தைகளை உருவாக்கக்கூடிய பணி ஒரு மாதத்திற்குள் இந்தச் சொற்குவை திட்டத்தின்கீழ் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய துறையாக இருந்தாலும் அதைத் தங்களுடைய நிருவாகத் திறமையினால் சிறப்பான துறையாக மாற்றி வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1956 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு மறைந்த

சி. சுப்ரமணியம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது தமிழ் ஆட்சி மொழிக்காக தமிழ் ஆட்சிச் சொல் அகராதி என்று ஓர் அகராதியை உருவாக்கி, ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்களை உருவாக்கி, அந்த அகராதியை நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். அதேபோல், சென்ற ஆண்டு இதே மன்றத்தில் நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தைப் புதுப்பித்து, தமிழில் சட்டச் சொற்களை உருவாக்கி, சட்டச் சொல் அகராதியை புதியதாக உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என நான் கேள்வி கேட்டபோது, அவர்கள் அதற்குச் சாதகமான பதிலை அளித்ததோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று உடனடியாக மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு ஒரு தலைவரையும், உறுப்பினர்களையும் நியமித்து, அந்த ஆணையத்தின் மூலமாக தமிழில் சட்டச் சொற்களை உருவாக்கும் பணி தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றது. அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, தங்களது துறை மூலமாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நீங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல கலைச் சொற்கள், அறிவியல் சொற்களை அதிக அளவில் உருவாக்கி தமிழ் சொற்கள் களஞ்சியம் என்ற அந்தக் களஞ்சியத்தை ஆண்டுக்கு ஒரு முறை இல்லை என்றாலும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீங்கள் உருவாக்கினால், தமிழில் புதிய சொற்கள் மக்களிடையே பரவலாக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அந்த முயற்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் இதே அவையிலே அறிவித்த ஒரு திட்டம் நீங்கள் சொன்ன அந்தத் தமிழ் களஞ்சியம் திட்டம். Encyclopaedia Britannica என்ற அந்தத் திட்டம் அப்போது உலக அளவில் famous ஆக இருந்தபோது, அதற்கு நிகராக அல்ல, அதைவிட அதிகமாக செய்ய வேண்டும் என்று சொல்லி தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் இந்தத் தமிழ் களஞ்சியம் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், மாறிவரும் தொழில்நுட்பச்

2019 ஜூலை 2]

சூழ்நிலையில் Wikipedia, Google search *போன்ற அமைப்புகள் வந்ததற்குப் பிறகு,* Encyclopaedia Britannica *இன்று வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தினை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக சொற்குவையிலேயே அதனுடைய அம்சங்களை உருவாக்குவது இம்முயற்சி. சொல் சார்ந்த விஷயங்கள் எல்லாவற்றையுமே அதில் கொண்டுவந்துவிடுகிறோம். அதுபோல்* Tamil Wikipedia Movement*—க்கு ஊக்கம் கொடுப்பதற்கு தமிழக அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. ஒரு குறி–*Unicode *கொண்டுவந்த விஷயம், எல்லோரையும் ஒரே தளத்தில் கொண்டுவருகின்ற ஒரு பங்கு, நமது* Tamil Virtual Academy *மூலமாக நாம் ஆற்றிக்கொண்டிருக்கும் பங்கு, இவற்றின்மூலம் நீங்கள் சொல்லும் தமிழ் களஞ்சியம் இயற்கையாகவே விளைந்து வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. சொற்குவை இதனையும் சாதிக்கும் என்று நான் நம்புகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–35

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பேச்சைத் தொடங்குகின்றபோது சொல் புதிது, பொருள் புதிது என்று சொன்னார். ஆனால், எனக்கு இவர் சொன்ன செய்திகள் எல்லாம் புதியதாக இருக்கின்றன. காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கேட்ட கேள்வி, ஓர் அற்புதமான கேள்வி; நியாயமான கேள்வி; கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆர்வமாக பதிலைச் சொல்கிறார்கள். நான் அந்த பதிலிலே குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், நீங்கள் இவ்வளவும் செய்தீர்கள் என்பது இந்தக் கேள்விமூலம் இப்பொழுதுதான் எங்களுக்குத் தெரிகிறது. எங்களுக்கே இப்பொழுதுதான் தெரிகிறது என்றால், இது ஊருக்கும், உலகத்துக்கும் எப்பொழுது தெரியப்போகிறது? முதலிலே ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய ஆராய்ச்சிக்கும், உங்களுடைய இலாகாவுக்கும் பணம் கொடுப்பது இந்தச் சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்திலிருந்து எடுத்துதான் நீங்கள் எல்லா செலவுகளையும் செய்கிறீர்கள். ஆனால் என்ன செய்கிறீர்கள் என்பதை, புதிது புதிதாக செய்கிற செய்திகளை இந்த மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா? அவை*

அற்புதமானவை; நீங்கள் செய்தவை சாதாரணமானவை அல்ல. ஆனால், அது விளம்பரம் இல்லாமலே, சித்த வைத்தியம் மாதிரி உங்களுடைய இலாகா வரையிலும்தான் தெரிகிறது. ஆகையால், மக்களுக்கு இது சென்று சேர்ந்தால்தான் எவ்வளவு பணிகள் செய்தோம் என்பது தெரியும். எனவே, நீங்கள் செய்த பணிகளை உங்கள் துறையின் மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தாங்கள் தெரிவிக்க வேண்டும். அதை புத்தகமாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: நன்றி. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளை பாராட்டியமைக்கு மிக்க நன்றி. கண்டிப்பாக இன்னும் அதிகமாகச் சென்று சேர்ப்பதற்காக, தொழில்நுட்ப ரீதியாக நிறைய செய்துகொண்டிருக்கிறோம். Digital மூலமாக நிறைய communicate செய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது புத்தகங்கள் மூலமாக பல படைப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. இதை நன்றாக வெளியே கொண்டு வருவதற்கு எங்களுடைய பதிப்புத் துறைக்கு இந்த முறை ஓர் ஊக்கம் அளித்து செய்யப்போகிறோம். பல ஊடகங்கள் மூலமாக இதைக் கொண்டுபோய்ச் சேர்க்க முயற்சி செய்கிறோம். இன்னும், இதை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவாக, எளிமையாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு இந்த policy note–ல் ஒரு முயற்சி எடுத்திருக்கிறோம். அதை நீங்கள் பார்த்ததற்குப் பிறகு comment செய்யுங்கள், நன்றி. கண்டிப்பாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும். இன்னும் அதிக அளவில் நம்முடைய தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறையினுடைய பணி வெளியே தெரிய வேண்டும். குறிப்பாக தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் அகரமுதலி செயல்பாடு. இதையெல்லாம் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு இன்னும் அதிகமாக ஊக்கத்துடன் பாடுபடுவோம் என்று அவைக்கு உறுதி கூறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

2019 ஜுலை 2]

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் அலுவல் மொழியாக இருக்க வேண்டுமென்கிற கோரிக்கை, மிக முக்கியமான ஒரு கோரிக்கை. இந்தக் கோரிக்கை இந்தக் காலச்சூழ்நிலையில் மிக வலிமை பெற்று வரக்கூடிய ஒரு கோரிக்கையாக இருக்கிறது. அண்மையிலேகூட பார்த்தோமென்று சொன்னால், தென்னக இரயில்வேயில் அவர்களுக்குள்ளே இருக்கக்கூடிய பரிமாற்றங்கள், ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டும்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், அதை கடுமையாகக் கண்டித்து ஓர் அறிக்கையினை விடுத்து, அவருடைய அறிவுறுத்தலின்படி நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. சேகர்பாபு அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்கள், திரு. ஆர்.எஸ். பாரதி உள்ளிட்டோர் எல்லாம் சென்று தென்னக இரயில்வே மேலாளர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுக்க முன்வந்த காரணத்தினால், உடனடியாக அந்தச் சுற்றறிக்கை திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, நான் கேட்பது, அத்தகைய போக்கினை மத்திய அரசு கடைப்பிடிக்கின்றபோது, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உடனடியாக தமிழை அலுவல் மொழியாக ஆக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மகாராஷ்டிரா மாநிலத்தில் அங்கே இருக்கக்கூடிய அலுவலகங்கள் மற்றும் வங்கிகளில் மராட்டிய மொழிதான் அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்று ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்திலும் அதுபோன்ற ஒரு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்வதோடு, குறிப்பாக மத்திய அரசிலிருந்து இப்பொழுது வரக்கூடிய கொள்கை விளக்கங்கள் எல்லாம், ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கின்றன. இப்பொழுது National Education Policy என்று சொல்லக்கூடிய தேசிய கல்விக் கொள்கைகூட அந்தந்த மாநில மொழிகளில் வரவில்லை. எனவே, இப்பொழுது தமிழகத்தில்கூட சில தன்னார்வலர்கள் முயற்சி எடுத்து, அதை மொழிபெயர்த்ததில் 456 பக்கங்கள் இருக்கின்றன. அது பெரிய volume–ஆக இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கத்திடமிருந்து வரக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புகள் மத்திய அரசினால் எல்லா மாநில மொழிகளிலும்

மொழிபெயர்க்கப்பட்டு அளிக்கப்படுவதற்கு மாநில அரசு மத்திய அரசாங்கத்திற்கு உரிய அழுத்தம் தர முன்வருமா என்றும் தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விமான நிலையத்தில் அறிவிப்புகள், விமானங்களில் அறிவிப்புகள் தமிழில் இல்லை என்பதற்கு நாங்கள் முயற்சி எடுத்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபொழுது அதை அறிவிப்பு செய்து தற்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கத்தின் மற்ற அமைப்புகளில், குறிப்பாக இந்தியை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு நாள் ஒவ்வொரு புது இந்தி வார்த்தை என்று போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிக் கொள்கையைத்தான் பின்பற்ற வேண்டுமென்ற ஓர் எண்ணத்திற்கு அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, கள்ளிக்குடி–திருப்பரங்குன்றம் இரயில் விபத்து நடைபெறாமல் கடைசி நேரத்தில் தடுக்கப்பட்டதற்கு ஒரு மொழிக் கொள்கை அவர்களிடம் இல்லை என்ற கருத்தைப் பதிய வைத்துத்தான் அந்த Southern Railway Circular வந்திருக்கிறது. தமிழக அரசாங்கம் சார்பாக நாங்களும் விளம்பரம் இல்லாமல் இதைப்பற்றி அவர்களிடம் எடுத்துச் சொன்னோம். அவர்கள் உடனே அந்த Circular–ஐ திரும்பப் பெற்றதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நான் நினைக்கிறேன். Southern Railway General Manager Mr. Kulshresta அவர்களை நான் நேரில் சந்தித்தேன். அவர் என்ன சொன்னார் என்றால், கலைச் சொற்களில் பிரச்சினை இருக்கிறது என்றும், அவர்களைத் தமிழில் பேச வைக்கலாம் என்றால், Southern Railway–ல் வேலை செய்யக்கூடியவர்களில் பாதி பேர் தமிழர்கள் இல்லை என்பதும் ஒரு காரணம் என்று சொன்னார். தமிழ் மொழியில் இரண்டு பேருக்கிடையில் பேசக்கூடிய வார்த்தைகளைப் புரிய வைப்பதற்கு, (standard communication) இன்றைக்கு வந்து பயிற்சி கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஒரு முக்கியமான development. எப்படி மகாராஷ்டிர மாநிலத்தில் ஒரு Circular பிறப்பித்தார்களோ, அதேபோன்று, தமிழகத்தில் இருக்கக்கூடிய

2019 ஜூலை 2]

மத்திய அரசு அமைப்புகளிலும் கொண்டுவருவதற்கு நாமும் ஒரு முயற்சியை எடுப்போம் என்று இந்த அவையில் உறுதி கூறிக்கொள்கிறேன். அதைக் கண்டிப்பாகச் செய்ய முடியும். அவ்வாறு செய்யக்கூடிய ஒரு விஷயத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், தமிழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதற்காக மத்திய அரசாங்கத்திற்கு இந்த முறை ஒரு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வளர் தமிழ் மையம் என்பதைப் பற்றி இந்த அவையில் நான் சொல்லியிருக்கிறேன். உலகத்தில் 1,000 இடங்களில் தமிழை கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற அமைப்பிற்கென நாம் நிதி கேட்டிருக்கிறோம். எப்படி 'இந்தி பிரச்சார சபா' இருக்கிறதோ, அதைப்போல மற்ற அரசியல் சாசனத்திலுள்ள 21 மொழிகளுக்கும் ஒரு தனி அமைப்பை உருவாக்குவதாக மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அதன்கீழ், நம்முடைய வளர் தமிழ் மையங்களுக்கு ரூ.50 கோடி நிதி கேட்டிருக்கிறோம். கண்டிப்பாக அந்த நிதியைத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதில், தமிழக அரசின் பங்கும் இருக்கிறது. ஏனெனில், தமிழ் மொழி மிகவும் தொன்மையானது, தமிழ் மொழி மிகவும் முக்கியமானது என்று வார்த்தை அளவில் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு பாரத பிரதமர் திரு. மோடி அவர்களும், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதைச் செயல் வடிவில் காட்டுவதற்கு அவர்களுக்கு இது ஒரு வாய்ப்பு என்று நாங்கள் கருதுகிறோம். ஆக, வளர் தமிழ் மையத்திற்கு இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதுபோன்று concrete *ஆக சில விஷயங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு நாம் அழுத்தம் தந்துகொண்டுதான் இருக்கிறோம். தமிழை வளர்ப்பதில், தமிழைப் பரப்புவதில் எவருக்கும் இளைத்தது அல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைச் சொல்லி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]